DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Civil Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**O.S.No. 171 of 2024**

Deposition of D.W. 1 } Prosecution
} Defence
}

Name of the Witness : திரு. கரிகாலன்

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 20.02.2026.

***முதல் விசாரணை***

நான் இந்த வழக்கில் பிரதி வாதி. நான் இத்துடன் எனது முதல் விசாரணை வாக்குமுலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள

சங்கதிகள் எனக்கு படித்து காண்பிக்கப்பட்டது. அதை புரிந்து கொண்டு என்னுடைய கைரேகை வைத்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

தாவா சொத்து ஈட்டியம்பட்டி கிராமத்தில் உள்ளது. போத்தன் என்பவர் உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை. என் தாயார் பெயர் என்னவென்றால் ராமி. என் தாயார் இறந்து விட்டார். என் தாயாருக்கு லேட் போத்தன் என்பவர் தாத்தா உறவுமுறை. போத்தனுக்கு ஒரே மகன் ராமன் என்பவர் மட்டும் தான். மேற்படி ராமன் இறந்து விட்டார். ராமனுக்கு 1ம் பிரதிவாதி கோபால், என் தாயார் ராமி, வாதி அம்மாசி, 2ம் பிரதிவாதி ராணி வாரிசுகள். தாவா சொத்து ராமனுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக ராமனின் வாரிசுகள் இன்று வரை பாகபிரிவினை செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.

2) வாதிக்கு, 1, 2 பிரதிவாதிகள், என்னுடைய அம்மா ராமிக்கு தாவா சொத்தில் தலா 40ல் 10 பாகமுள்ளது என்றால் சரிதான். வாதிக்கு நாங்கள் பாகம் கொடுக்காததால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் எனக்கு ஆட்சேபனை இல்லை.

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Court,
Dharmapuri.